## முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு

| வழக்கு எண் | OS | 345 | of | 2019 |
|---|---|---|---|---|

2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ம் நாளான இன்று

| | |
|---|---|
| வாதி/பிரதிவாதி<br>மனுதாரர்/எதிர்மனுதாரர் | தரப்பில் பி.வா.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கிரிகோரி | தந்தை பெயர் | |
| கிராமம் | | கணவர் பெயர் | |
| ஜாதி | | தாலுக்கா | |
| | | சமயம் | |
| தொழில் | | வயது | |

நாள்-01.04.2026

பி.வா.சா.-1

குறுக்கு விசாரணை-

வாதி 07.06.2019 ல் எனக்கு ஒரு அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரிதான். அதற்கு நான் பதில் அறிவிப்பு கொடுத்தேன் . வா.சா.ஆ.4 பதில் அறிவிப்பில் உள்ள விவரங்கள் நான் வழக்கறிஞரிடம் சொல்லி எழுதப்பட்டவைதான். அதில் உள்ள விவரங்கள் சரிதான். அதில் வாதி என்னிடம் இருந்து ரூ.20 பெறுமானம் உள்ள முத்திரைத்தாள்கள்-5 மற்றும் பச்சை தாள்கள் 5 ல் revenue stamp ஒட்டப்பட்டுஅவற்றில் கையொப்பம்பெற்றுக் கொண்டார் என்று சொல்லியிருக்கிறேன். வா.சா.ஆ.4 பதில் அறிவிப்பில் என்னுடைய கையெழுத்தும் போட்டுயிருக்கிறேன். அந்த

முத்திரைதாள்களை முறைகேடாக பயன்படுத்திதான் வாதி இந்த தாவா போட்டுள்ளார் என்று சொல்லியிருக்கிறேன். 5 முத்திரை தாள்களில் 3 ஐ பயன்படுத்தி இந்த தாவா போட்டுள்ளார். மேற்படி வா.சா.ஆ.1 3 முத்திரை தாள்களில் என்னுடைய கையெழுத்துகள் உள்ளன. என்னுடைய சொத்தின் தாய் பத்திரம் எதையும் வாதியிடம் நான் தரவில்லை. என்னுடைய சொத்தின் தாய் பத்திரம் என்னிடம் இல்லை, வாதியின் கணவரிடம் உள்ளது. M.G. ராஜா என்ற பெயரில் எனக்கு வங்கி கணக்குகள் இருந்தன. State bank of india, மதுராந்தகம் கிளையில் வங்கி கணக்குகள் இருந்தன. ஆனால் அரசு ஆவணங்களில் எதிலும் நான் பிறந்தது முதல் M.G. ராஜா என்ற பெயர் இருந்ததில்லை. M.G. ராஜா என்ற பெயரில் எனக்கு State bank of india, மதுராந்தகம் கிளையில் காசோலை புத்தகம் வழங்கப்பட்டதா என்று தற்போது ஞாபகமில்லை. M.G. ராஜா என்ற பெயரில் உள்ள 3 காசோலைகள் வாதியின் கணவரிடம் கொடுத்தேன். ஏல சீட்டு ஆரம்பிக்கும் போது security க்காக வாதியின் கணவர் வெற்று காசோலைகள் பெற்றுக் கொள்வார். நான் M.G. ராஜா என்ற பெயரில் கையொப்பமிட்டு மேற்படி வங்கி கணக்கை முடித்துவிட்டேன். எனக்கு உத்தரவு போடப்பட்டதின் பேரில் நான் M.G. ராஜா பெயரில் இருந்த வங்கி கணக்கை முடித்துவிட்டேன். பி.வா.சா.ஆ.1 என்னுடைய வங்கி கணக்கு பட்டியல் ஆகும். எனக்கு State bank of india ல் கணக்கு எதுவும் தற்போது இல்லை. எனது தரப்பில் காசோலை எதுவும் குறியீடு செய்யவில்லை. வாதி கொடுத்த காசோலையும் குறியீடு செய்யவில்லை. பி.வா.சா.ஆ.2 ல் கையெழுத்தோ

முத்திரையோ இல்லை. பி.வா.சா.ஆ.2 முழுவதுமே தாள்களை கிழித்து எழுதப்பட்டுள்ளன என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ல் வாதியின் பெயரோ, வாதியின் கணவர் பெயரோ, வாதியின் பைனான்ஸ் கம்பெனி பெயரோ இல்லை. பி.வா.சா.ஆ.8,10 இரண்டுமே ஒரே ஆவணம் என்றால் சரிதான். அந்த புகார் முன்னிலைக்கு போலீசார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை. நான் வாதியிடம் பணம் பெற்று கொண்டு வா.சா.ஆ. 1 எழுதிக் கொடுத்துவிட்டு கடனை ஒப்புக் கொண்டுவிட்டு தற்போது வாதிக்கு தொகை செலுத்தாமல் இருக்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா தீர்ப்பாணைக்குரியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை -இல்லை.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu